**அசல் வழக்கு எண். 24/2020 நாள்: 16.07.2025**

**வா.சா.1 திருமதி. தமிழ்செல்வி**

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

5) எனக்கு படிக்க தெரியாது என்றால் சரிதான். பாஸ்கர் எங்கு வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பற்றி எனக்க தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1, 2, 3 ஆகியவற்றில் எனது கணவர் அறிவழகன் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல.

6) இந்த வழக்கிற்கு முன்பு காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல திருவையாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். திருவையாறு காவல்நிலையத்தை தவிர வேறு எந்த காவல்துறையிடமும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்ன புகார் என்றால் பம்பு செட்டுக்கு பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான புகார். வா.சா.ஆ.7, 8 ஆகியன வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 இந்த வழக்கிற்கு தொடர்பற்றது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4–ல் எனது கையொப்பம் உள்ளதா என்றால் ஆமாம்.

7) இந்த வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, எனக்கு சொத்து மீண்டும் வேண்டும். வா.சா.ஆ.4 –ல் கிரைய ஆவணத்தை எனது கணவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளதால் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, ஏமாற்றி எழுதிவாங்கியுள்ளார். எனது கணவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஒத்திபத்திரம் என்று சொல்லி கிரைய பத்திரம் எழுதிக்கொண்டார்கள். நான் தற்போது கூறியுள்ள சங்கதிகள் குறித்து எனது வழக்குரையில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.4 ஆவணம் சட்டத்திற்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.